பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
13 11 2024 **WEDNESDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. நாடு முழுவதும் மருத்துவ கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. போட்டித் தேர்வு பயிற்சி மையங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

3. சென்னை, கிண்டி அரசு மருத்துவமனையில் மருத்துவர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்திற்கு மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

4. எதிர்காலத்தில் இதுபோன்ற தாக்குதல் சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று தமிழக அரசு கூறியுள்ளது.

5. பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான உலக துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று தங்கப்பதக்கம் வென்றது.

>>>>><<<<

நாடு முழுவதும் மருத்துவ கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தமிழகத்தின் நாகர்கோவில், தஞ்சாவூர் உட்பட நாடுமுழுவதும் 18 ரயில் நிலையங்களில் மக்கள் மருந்தகங்களை, காணொலி வாயிலாக இன்று திறந்து வைத்து அவர் பேசினார்.

குறைந்த செலவில் உயரிய சிகிச்சை அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இலவசமாக மருந்துகள் மக்களுக்கு வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடுமுழுவதும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் ஒரு லட்சத்து 50 ஆயிரத்திற்கும் கூடுதலான ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்கள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

நாகர்கோவில் ரயில் நிலையத்தில் இந்த மருந்தகம் திறக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பயணிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயணிகள் 40 செகண்ட்ஸ்)

>>>>><<<<

போட்டித் தேர்வு பயிற்சி மையங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

இன்று புதுதில்லியில் நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலர் திருமதி. **Nidhi Khare** இதனை வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், மாணவர்கள் மற்றும் பெற்றோரின் நலனை கருத்தில் கொண்டு மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம், இந்த வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளதாக கூறினார்.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கி நடப்பாண்டு ஆகஸ்ட் மாதம் வரை ஒரு கோடிக்கும் கூடுதலான தொகை பயிற்சி மையங்களால் மாணவர்களுக்கு திருப்பி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்

நுகர்வோர் நலத்துறை மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் திருமதி. **Nidhi Khare** கூறியுள்ளார்.

>>>>><<<<

சென்னை கிண்டி அரசு மருத்துவமனையில் மருத்துவர் பாலாஜியை, நோயாளியின் குடும்ப உறுப்பினர் ஒருவர் கத்தியால் குத்தியதில் அவர் படுகாயமடைந்தார்.

இந்த சம்பவம் குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ள முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், பாதிக்கப்பட்ட மருத்துவருக்கு தேவையான அனைத்து சிகிச்சைகளையும் வழங்க அறிவுறுத்தியிருப்பதாக கூறியுள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவம் குறித்து விரிவான விசாரனை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் இருப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாநில அரசு மேற்கொள்ளும் என்று திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதற்கிடையே, மருத்துவர் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு தலைவர்கள் பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அரசு மருத்துவமனையில் பகலில் நடத்தப்பட்ட இந்த தாக்குதல் சம்பவம் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது என்று மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த சம்பவம் அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் உயிருக்கே உத்தரவாதம் இல்லாததை காட்டுவதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் கோபமடையும் நிலை உருவாகி வருவதை இது உணர்த்துவதாகவும் அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திமுக ஆட்சியில் அரசு மருத்துவமனைகளின் நிலை எவ்வாறு இருக்கிறது என்பதற்கு இது உதாரணமாக திகழ்கிறது என்றும், விளம்பரத்தில் மட்டுமே திமுக அரசு கவனம் செலுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவர்கள், அரசு ஊழியர்கள், விவசாயிகள் என யாருடைய உயிருக்கும் பாதுகாப்பு இல்லாத சூழல் தமிழகத்தில் நிலவுவதாகவும் கூறியுள்ள திரு. எல். முருகன், சட்டம் ஒழுங்கை சீர் செய்வதில் திமுக அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமியும் இந்த தாக்குதல் சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், சட்டம் ஒழுங்கை பாராமரிக்க தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ், தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த், தமிழக வெற்றிக் கழக தலைவர் திரு. விஜய் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் மருத்துவர் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்திய மருத்துவர் சங்கமும் இந்த தாக்குதல் சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மருத்துவமனைகளில் விரிவான பாதுகாப்பு அம்சங்கள் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் மருத்துவர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

>>>>><<<<

தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகளில் போலி ஆசிரியர்களைக் கொண்டு பாடம் நடத்தப்படுவதாக வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானது என்று மாநில அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, பள்ளிக் கல்வித்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த புகார் குறித்து மாவட்ட கல்வி அலுவலர்களிடமிருந்து அறிக்கை கோரப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில், பிற நபர்களைக் கொண்டு பாடம் கற்பித்தது தொடர்பாக எந்த கருத்துருவும் பெறப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலு குறைந்தள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், இருப்பினும் சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 72 செகண்ட்ஸ்)

>>>>><<<<

மாவட்டச் செய்திகள்

தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தில் அமைந்துள்ள சரஸ்வதி மஹால் நூலகத்தினை மாநில ஆளுநர் திரு. ஆர்.என். ரவி இன்று பார்வையிட்டார்.

>>>>><<<<

நெல்லை மாவட்டத்தில் உள்ள சுற்றுலாத்துறை விடுதி மற்றும் உணவகங்களில் அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜேந்திரன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<

திண்டுக்கல் மாவட்டம், முத்துநாயக்கன்பட்டி கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி. பூங்கொடி இன்று வழங்கினார்.

>>>>><<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான கலைத்திருவிழா மற்றும் போட்டிகளை ஆட்சியர் திரு. தர்பகராஜ் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<

நாமக்கல் மாவட்டம், குமாரப்பாளையத்தில் டெங்கு விழிப்புணர்வு குறித்து மாணவர்கள் பங்கேற்ற சைக்கிள் பேரணி இன்று நடைபெற்றது.

>>>>><<<<

ராணிப்பேட்டை மாவட்டத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி. சந்திரகலா இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

>>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான உலக துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று தங்கப்பதக்கம் வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 10 மீட்டர் கலப்பு இரட்டையர் பிரிவில் **Aishwary Pratap Singh Thomar – Sanjeeta Das** இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

>>>>><<<<

மலேசிய கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Ramit Tandon** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 11-5, 14-12, 5-11, 11-4 என்ற செட்கணக்கில் எகிப்தின் **Yahya Elnawasany**-ஐ வென்றார்.

வேலவன் செந்தில்குமார் மற்றும் அபய் சிங் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<

இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான மூன்றாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

**Centurion**-ல் இப்போட்டி இரவு மணி 8.30-க்கு தொடங்குகிறது.

>>>>><<<<

நான்கு போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று சமநிலையில் உள்ளது.

>>>>><<<<

ரயில்வே அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டநேர இறுதியில் தமிழக அணி விக்கெட் இழப்பின்றி 19 ரன் எடுத்துள்ளது.

>>>>><<<<